[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 27

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு) (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 29/1991) நிறைவேற்றப் பெறவேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழு—செனட் மற்றும் நிர்வாகக் குழு — போர்டு ஆப் மேனேஜ்மென்ட் ஆகியவற்றுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளன.

(1) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 27] [பேரவைத் தலைவர்]

(2) தமிழ்நாடு அரசின் அனாதை இல்லங்கள் மற்றும் கருணை இல்லங்கள் குழுவின் நிர்வாகக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு இப்பதவியின் காலம் முடிவு அடையும்.

வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 28–9–1991 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 30–9–1991 திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1–10–1991 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம். நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 3–10–1991 வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே, சென்னை, கோட்டையில் இருக்கும் 'குழுக்கள் கூடும் அறையில்' வாக்கெடுப்பு நடைபெறும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை 28-9-1991 காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

116. 1989–90 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை (1948–ஆம் ஆண்டு மின்சார (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

117. 1989-90–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் பதின்மூன்றாம் ஆண்டறிக்கை (1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது).